தினகரன் 26.08.2025

# தமிழ்நாடு காகித ஆலை சார்பில் சிறப்பு மருத்துவ முகாம்




▶ தமிழ்நாடு காகித ஆலை சார்பில் சமூக சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

வேலாயுதம்பாளையம், ஆக. 26: தமிழ்நாடு காகித ஆலை சார்பில் சமூக சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சக்சேனா 21.2.2025ல் துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த முகாம் பொது மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோயமுத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 21.2.2025 முதல் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. இன்றுடன் (25.08.2025) 50-வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதூருடன் ஆறாம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது. மேற்கண்ட மருத்துவ முகாமில் 922 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 5625 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது. காகித ஆலையை சுற்றியுள்ள 50 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் திட்டம் தீட்டி இதுவரை 5625 பொது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கிய ஆலை நிர்வாகத்தை வேலாயுதம்பாளையம் பகுதியில் சேர்ந்த பொதுமக்கள் மனதார பாராட்டினார்.

மாலை மலர் 26.08.2025



புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் பொன்னியாக் கவுண்டன்புதூரில் மருத்துவ முகாம் நடைபெற்ற போது எடுத்த படம்.

## புகளூர் காகிதபுரம்

# செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் தினசரி நடமாடும் மருத்துவ முகாம்

வேலாயுதம்பாளையம், ஆக.26—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் தினசரி நடமாடும் இலவச மருத்துவ முகாம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சக்சேனாவால் தொடங்கி வைக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்முகாமானது பொது மக்களின் மருத்துவ தேவை யை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கோயமுத்தூர் ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையுடன் இணைந்து காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் நடத்தி வருகிறது. நேற்றுடன் 50—வது கிராமமான பொன்னியாக் கவுண்டன்புதூருடன் 6—ம் மாத மருத்துவ முகாமானது நிறைவு பெற்றது.

மேற்கண்ட மருத்துவ முகாமில் 922 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவ முகாம்கள் மூலம் இதுவரை 5625 பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இந்த மருத்துவ முகாம்களை காகித நிறுவனம் தொடர்ந்து நடத்தி வருகிறது.

காலைக்கதிர் 28.08.2025

# நடமாடும் மருத்துவ முகாமில் 5,625 பேருக்கு சிகிச்சை

**கரூர், ஆக. 28**

புகளூர் டி.என்.பி.எல்., நடமாடும் மருத்துவ முகாமில், 5,625 பேர் சிகிச்சை பெற்றனர்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ், நடமாடும் இலவச மருத்துவ முகாம் நடந்து வருகிறது. தனியார் மருந்துவமனையுடன் இணைந்து, காகித ஆலையை சுற்றியுள்ள புகளூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகளூர், திருக்காடுதுறை ஆகிய பஞ்சாயத்து கிராமங்கள் பயன்பெறும் வகையில், மருத்துவ முகாம்கள் நடக்கின்றன.

அதில், 50வது கிராமமான பொன்னியாக்கவுண்டன்புதுாரில் மருத்துவ முகாம் நடந்தது. அங்கு, 922 பேருக்கு மருத்துவ ஆலோசனை, தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதுவரை மருத்துவ முகாம்கள் மூலம், 5,625 பேர் சிகிச்சையில் பயனடைந்துள்ளனர்.

இத்தகவல், டி.என்.பி.எல்., ஆலை நிர்வாகத்தில் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.